செய்தி வெளியீடு எண் 01 நாள் 02.01.2016

# திருவள்ளூர் மாவட்டத்தில் மாவட்ட அளவிலான கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் - 2016 -2017 விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

~~~~~

2016-17ம் ஆண்டிற்கான தேசிய அளவில் நடத்தப்படும் கேலோ இந்தியா (Khelo India) திட்டத்தின்கீழ் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேர்வுப் போட்டிகளை 14 மற்றும் 17 வயதுக்குட்பட்ட பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட அளவிலான தடகளம், நீச்சல், கையுந்து பந்து, குத்துச்சண்டை, டென்னிஸ், டேக்வோண்டோ, இறகுப்பந்து, மேசைப்பந்து, கபாடி மற்றும் பளுதூக்குதல் ஆகிய விளையாட்டுக்களில் (Competitions) 05.01.17 மற்றும் 6.1.2017 ஆகிய நாட்களிலும், சைக்கிளிங், கூடைப்பந்து, மல்யுத்தம், ஜிம்னாஸ்டிக்ஸ், கோ-கோ, உஷூ, கைப்பந்து, ஹாக்கி, கால்பந்து, வில்வித்தை மற்றும் ஜூடோ ஆகியவற்றில் தேர்வுப் போட்டிகளை (Selection Trials) 7.1.2017 அன்றும் திருவள்ளூரில் நடத்தப்பட உள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்கள்.

விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும் விவரங்கள் : நீச்சல் மற்றும் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் 05.01.2017 அன்று தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், முகப்பேரில் காலை 8.00 மணியளவில் தொடங்கி நடத்தப்படவிருக்கிறது. தடகளம், டேக்வோண்டோ, வாலிபால், பளுதூக்குதல், இறகுப்பந்து, குத்துச்சண்டை, கபாடி, மேசைப்பந்து ஆகிய விளையாட்டுப் போட்டிகள் 06.01.2017 அன்று தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், ஒருங்கிணைந்த மாவட்ட விளையாட்டரங்கம், திருவள்ளூரில் நடத்தப்படவிருக்கிறது.

தேர்வுப் போட்டிகள் நடத்தப்படும் விவரங்கள் : சைக்கிளிங் (Cycling) கூடைப்பந்து (Basketball) கைப்பந்து (Handball) கால்பந்து (Football) கோ-கோ (Kho-Kho) ஹாக்கி (Hockey) ஜூடோ (Judo) மல்யுத்தம் -Wrestling (Freestyle) ஜிம்னாஸ்டிக்ஸ் (Artistic Gymnastics) உஷூ (Wushu) வில்வித்தை (Archery) 07.01.2017 அன்று தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், ஒருங்கிணைந்த மாவட்ட விளையாட்டரங்கம், திருவள்ளூரில் காலை 8.00 மணியளவில் தேர்வு போட்டிகள் நடத்தப்படும்

கோலோ இந்தியா திட்டத்தின் கீழ் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள தகுதிதிகள் : 1.12.2016 அன்று 14 வயதுக்குட்பட்டோர் (1.1.2003 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பிறந்தவர்களாக இருக்க வேண்டும். 31.12.2016 அன்று 17 வயதுக்குட்பட்டோர் (1.1.2000 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பிறந்தவர்களாக இருக்க வேண்டும்) மாணவ / மாணவியர்கள் வயது சான்றாக பிறப்புச் சான்றிதழ் அல்லது பள்ளிச் சான்றிதழ் கண்டிப்பாக கொண்டு வருதல் வேண்டும். மாவட்ட அளவிலான போட்டியில் பங்கு கொள்ள உள்ள வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் மேலாளர்கள் ஆகியோருக்கு உணவு மற்றும் பயணப்படி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் வழங்கப்படும். சாதாரண பேருந்துக் கட்டணம் மட்டுமே அனுமதிக்கப்படும் சாதாரண பேருந்து கட்டச் சீட்டினை சமர்ப்பித்து பயணப்படி பெற்றுக்கொள்ளலாம். மாவட்ட அளவிலான போட்டியில் முதல் மூன்று இடங்களை பெறும் அணி வீரர்கள் / வீராங்கனைகளுக்கு முதல் பரிசு ரூ.350/-, இரண்டாம் பரிசு ரூ.250/- மற்றும் மூன்றாம் பரிசு ரூ.150/- என பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். பரிசுத் தொகை காசோலைகளாக வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், திருவள்ளூர் அவர்களை அலுவலக நேரங்களில் 0416-27666249 அல்லது 7401703482 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விவரங்களை அறியலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~